கதர் துணி கொள்முதல்

*257. வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1969-70, 1970-71 ஆம் ஆண்டுகளில் மட்டும் கதர் வாரியம், சென்னை கிராமோத்யோக் பவனிலிருந்து வாங்கிய கதரின் மதிப்பு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 1969-70-இல் ரூ. 3,13,691-க்கும், 1970-71-இல் ரூ. 9,01,766-க்கும் வாங்கியிருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : இந்தக் கதர் கிராமத் தொழில் வாரியம் வாங்கக்கூடிய பொருள்களை நமது மாநிலத்திலேயே வாங்கிக்கொள்ளாது, பம்பாயில் உள்ள கிராமோத்யோக் பவனில் இருந்து வாங்கவேண்டிய அவசியம் என்ன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அங்கிருந்து வாங்குவது நமது மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படாத மட்டரக நூல்களினால் செய்யப்படும் விரிப்புகள், பட்டுச் சேலைகள், கம்பளிகள் போன்றவைதான். கிராமோத்யோக் பவன் என்பது மத்திய அரசாங்கத்தினால் நடத்தப்படுகிற ஒன்று. பம்பாயில் தலைமையகம் இருக்கிறது. அதன் உதவியைக்கொண்டே தான் நமது மாநிலத்திலும் கதர் கிராமத் தொழில் வாரியமே நடைபெறுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம தொழில் கூட்டுறவு பயிற்சிப்பள்ளி

*258. வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள தொழில் கூட்டுறவு பயிற்சி பள்ளியை மூடிவிட கதர் வாரியம் முடிவு செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ? பம்பாய் கதர் கமிஷன் இதற்காக எவ்வளவு பணம் தருகிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை. 1971-72-க்கு மானியமாக இப் பயிற்சிப் பள்ளிக்கு ரூ. 65,600 வழங்கியுள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : இந்தத் தொழில் நிறுவனம் நடைபெற இன்னும் அதிகமான மானியத்தைப் பெற முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இது தொழில் நிலையம் அல்ல, பயிற்சி நிலையம். இப்போது கொடுக்கப்படுகிற மானியம் போதுமானதாக இருக்கிறது. கூட்டுறவுத்துறையில் இன்னொரு பயிற்சி நிலையம் நடைபெறுகிறது. இதையும் இணைப்பதன் மூலம் சிக்கனமாக நடைபெற முடியும்.

1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் வினா—விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

படித்து வேலைவாய்ப்பில்லார்க்கு விவசாயப் பயிற்சி

*259. வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

படித்து வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்கட்கு விவசாயத்துறையில் பயிற்சி அளித்து அத்தொழிலில் ஈடுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: படித்து வேலை யில்லாமலிருப்பவர்களுக்கு விவசாயத்தில் பயிற்சி அளித்து அவர்களை அத்தொழிலில் ஈடுபடுத்தும் திட்டங்கள் ஒன்றும் இப்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் 18 முதல் 30 வரை வயதுள்ள எட்டாம் வகுப்பு வரை படித்து தேர்ச்சிபெற்ற விவசாயிகளின் பிள்ளை களுக்கு விவசாயத்தில் ஓராண்டுக்காலம் பயிற்சி அளித்து அவர்களை சிறந்த விவசாயிகளாக ஆக்குவதற்குத் திட்டம் ஒன்று ஏற்கனவே அமலில் இருந்துவருகிறது. உயர்நிலைப்பள்ளியில் இறுதி ஆண்டு தேர்ச்சியுற்ற நபர்களுக்கு விவசாயத்தில் (டிப்ளமா) அத்தாட்சி பத்திரவகுப்பு ஆரம் பிப்பதுபற்றி விவசாய இயக்குநர் கடந்த நவம்பரில் செயற்குறிப்பு ஒன்றை அரசின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்தார். அதன்மீது அரசு இத்திட்டத்தை தற்பொழுது 1972-73-ம் ஆண்டிற்கான இரண்டாவது பாகத்திட்டமாகச் சேர்த்துக்கொள்வதற்கு காலதாமதம் ஆகிவிட்டபடியால், அடுத்த ஆண்டிற் கான, அதாவது 1973-74-க்கான இரண்டாவது பாகத்திட்டத்தில் சேர்த்துப் பரிசீலனை செய்வதற்கு தன் செயற்குறிப்பை அனுப்புமாறு கடந்த ஜனவரித் திங்களில் வேளாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளார்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இளைஞர் அணியில் சேர்த்துக்கொள்ளப்படும் இளைஞர்களை இந்தத் திட்டத்திற்குப் பயன்படுத்தி, அவர்களுக்கு விவசாயத் துறையில் பயிற்சி அளித்து, இத்தொழிலில் ஈடுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அப்படி அவர் சொல்லுகின்ற முறையில் திட்டம் பரிசீலனையில் இல்லை. ஆனால் டிப்ளமா கொடுப்பது பற்றிய திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலிருந்து டிப்ளமா கோர்ஸ் துவங்க ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படி ஆரம்பிக்க இருக்கும் கோர்ஸில் எத்தனை மாணவர்களைச் சேர்க்க இருக்கிறார்கள். சேரக்கூடிய மாணவர்களுக்கு ஏதாவது கல்வித்தரம் வைக்கப்பட்டிருக்கிறதா? அதுபற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: யோசனையில் இருக் கிறது என்று சொன்னேன். ஆய்வு முடிந்த பிறகு புள்ளி விவரங்கள் சொல்லப்படும்.